## திண்டிவனம் நகராட்சி
## அவசர கூட்டம்

முன்னிலை:– நிர்மலா ரவிசந்திரன், நகர மன்ற தலைவர்.

11.04.2022–ம் திங்கள் கிழமை பிற்பகல் 12.00 மணிக்கு திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற்ற நகர மன்ற அவசர கூட்டப் பொருள் விபரம்.

| வ. எண் | பொருள் விபரம் | குறிப்பு |
|---|---|---|
| 1 | மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 05.04.2022ல் பெலாக்குப்பம் ஊராட்சி வெண்மணி ஆத்தூரில் Lotus Foot Wear Pvt. Ltd. காலணி நிறுவனத்தை அடிக்கல் நாட்டினார். இந் நிறுவனத்தின் மூலம் இப்பகுதியில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திட வழிவகை செய்த தமிழக முதல்வர் அவர்களுக்கும் , இதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு சிறுபான்மை மற்றும் வெளிநாட்டுவாழ் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்களுக்கும் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு ஆகியோர்களுக்கு நகர மன்றம் தலைவர் துணைத் தலைவர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் சார்பாக நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. | தீர்மானம் எண்:01. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 2 | தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.<br><br>15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.<br><br>அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் | தீர்மானம் எண்:02. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.<br><br>தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.<br><br>சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.<br><br>நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.<br><br>சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் | |

பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>சொத்துவரி:</u>

குடியிருப்பு கட்டடங்கள்(**Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(**Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

<u>**காலிமனை வரி சீராய்வு:**</u>

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

<u>**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**</u>

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் திண்டிவனம் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி(**Current Liabilities**) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 2.35 5கோடி |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | - |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | 5.42 கோடி |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 1.11 கோடி |
| | மொத்தம் | 8.88 கோடி |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், –திண்டிவனம் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு

செய்யலாம்.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு கீழ்கண்டவாறு மண்டலங்கள் நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| திண்டிவனம் நகராட்சி | | | | |
|---|---|---|---|---|
| **வ. எண்** | **பழைய வார்டு எண்** | **புதிய வார்டு எண்** | **தெரு பெயர்** | **மண்டலம்** |
| 1 | 1 | 1 | **வண்ணாங்குட்டை** | D |
| 2 | 1 | 1 | **காந்தி நகர்** | D |
| 3 | 1 | 5 | **கல்பான கண்ணன்** | C |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நகர் செவ்வந்தி தெரு | |
| 4 | 1 | 5 | ஆசிரியர் நகர் | C |
| 5 | 1 | 1 | திருவள்ளுவர் நகர் மல்லிகை தெரு | C |
| 6 | 1 | 1 | ராஜகோபால் தெரு (சந்தைமேடு) | C |
| 7 | 1 | 1 | ஜே.வி.நகர் | C |
| 8 | 1 | 5 | கிருஷ்ணன் நகர் | C |
| 9 | 1 | 1 | குருவிஷ்ணு நகர் | C |
| 10 | 1 | 5 | கல்பான கண்ணன் நகர் சாமந்தி தெரு | C |
| 11 | 1 | 5 | சாய்லட்சுமி நகர் | C |
| 12 | 1 | 1 | பொன்னியம்மன் நகர் | C |
| 13 | 1 | 1 | அம்மன் அவன்யூ | C |
| 14 | 1 | 5 | கோடீஸ்வரன் நகர் | C |
| 15 | 7 | 7 | கிரிஸ்டியன் தெரு | C |
| 16 | 8 | 9 | மகாவீர் நகர் | C |
| 17 | 8 | 9 | இனியா கார்டன் | C |
| 18 | 12 | 11 | தில்லை நகர் | C |
| 19 | 20 | 24 | ராம் நகர் | C |
| 20 | 20 | 23 | தனபால் நகர் | C |
| 21 | 20 | 24 | பெரியார் தெரு | C |
| 22 | 20 | 24 | ஆதிலட்சுமி நகர் | C |
| 23 | 20 | 23 | தட்சிணாமூர்த்தி நகர் | C |
| 24 | 20 | 24 | மகாலட்சுமி நகர் | C |
| 25 | 20 | 24 | எஸ்.வி.எஸ்.கே நகர் விரிவு | C |
| 26 | 20 | 24 | ராம் நகர் விரிவு | C |
| 27 | 20 | 24 | காமராஜர் நகர் விரிவு | C |
| 28 | 20 | 24 | ஜே.ஜே நகர் | C |
| 29 | 20 | 24 | மகாலட்சுமி நகர் விரிவு | C |
| 30 | 20 | 24 | கந்தசாமி தெரு | C |
| 31 | 20 | 24 | தனலட்சுமி நகர் | C |

| | | | | |
|---|---|---|---|---|
| 32 | 20 | 24 | புது காந்தி நகர் | C |
| 33 | 20 | 24 | அம்மன் நகர் | C |
| 34 | 20 | 24 | துரைசாமி நகர் | C |
| 35 | 20 | 24 | அம்மன் கார்டன் | C |
| 36 | 22 | 33 | ரஹமத் கார்டன் சிட்டி | C |
| 37 | 22 | 33 | வெங்கடேஸ்வரா நகர் | C |
| 38 | 22 | 33 | சீனுவாசன் கார்டன் | C |
| 39 | 22 | 33 | ஜி.என்.எம். நகர் | C |
| 40 | 22 | 33 | ஜெ.பி நகர் | C |
| 41 | 22 | 33 | நல்லியகோடான் நகர் | C |
| 42 | 22 | 33 | கோபாலகிருஷ்ணன் நகர் | D |
| 43 | 22 | 33 | சீனுவாசா நகர் விரிவு | C |
| 44 | 22 | 33 | லட்சுமி நகர் | C |
| 45 | 3 | 4 | காமாட்சியம்மன் நகர் | C |
| 46 | 32 | 14 | ஹீராசந்த் கார்டன் | A |
| 47 | 32 | 14 | பாரிதாபாத் தெரு | B |
| 48 | 28 | 18 | கே.பி.என். நகர் | C |
| 49 | 31 | 15 | ஆர்.எஸ்.பி. நகர் | C |
| 50 | 31 | 15 | கங்கா நகர் | C |
| 51 | 31 | 15 | விவேகாந்தர் நகர் | C |
| 52 | 31 | 15 | பிராகாஷ் நகர் | C |
| 53 | 31 | 15 | ராம் நகர் | C |
| 54 | 31 | 15 | ஜெய் அனுமான் நகர் | C |
| 55 | 4 | 3 | சக்தி நகர் | C |
| 56 | 4 | 3 | குட்டி மணி நகர், 1 வது தெரு, 2 வது தெரு 3வது தெருக்கள் | C |
| 57 | 4 | 3 | காமாட்சியம்மன் நகர் | C |
| 58 | 4 | 3 | தட்சாணாமுர்த்தி நகர் | C |
| 59 | 4 | 3 | ஆலன் தெரு | C |
| 60 | 4 | 3 | பாரதியார் தெரு | C |

| | | | | |
|---|---|---|---|---|
| 61 | 4 | 3 | அசோக்குமார் நகர், 1,2,3, வது தெருக்கள் | C |
| 62 | 4 | 3 | நடேசன் நகர் 1,2,3, வது தெருக்கள் | C |
| 63 | 4 | 3 | ஜெயலஷ்மி நகர் | C |
| 64 | 4 | 3 | சண்முகம் நகர் | C |
| 65 | 4 | 3 | வெள்ளவாரி கரை தெருஜ | C |
| 6<br>6 | 4 | 3 | மாணிக்கம் நகர், 1,2,, வது தெருக்கள் | C |
| 67 | 4 | 3 | ஜெயம் நகர் | C |
| 6<br>8 | 4 | 3 | சாமி சம்மங்கி நகர் | C |
| 6<br>9 | 4 | 3 | பிரபாகரன் நகர் | C |
| 70 | 4 | 3 | மாருதி அவன்யூ | C |
| 71 | 4 | 3 | எஸ்.ஆர்.கஸ்துரி நகர் | C |
| 72 | 4 | 3 | சுந்தரவிநாயகர் நகர் | C |
| 73 | 4 | 3 | ஆண்டாள் நகர் | C |
| 74 | 4 | 3 | நாகாத்தம்மன் கோயில் தெரு. 1,2,3, வது தெருக்கள் | C |
| 75 | 16 | 20 | ஜெ.ஜெ. நகர் | C |
| 76 | 16 | 10 | அம்மன் நகர் | C |
| 77 | 16 | 10 | ராம் நகர் | C |
| 78 | 16 | 10 | வட ஆலப்பாக்கம் ரோடு | C |
| 79 | 16 | 10 | சீனுவாசன் நகர் | C |
| 80 | 16 | 20 | எஸ்வி.எஸ்கே. நகர் | C |
| 81 | 16 | 10 | ஜோதி நகர் | C |
| 82 | 16 | 10 | குமரன் நகர் | C |
| 83 | 16 | 10 | வி.எம்.எஸ் நகர் | C |
| 84 | 16 | 10 | என்.ஜி.ஓ.காலனி | C |
| 85 | 24 | 30 | நடராஜன் நகர் | C |
| 8<br>6 | 24 | 30 | பாலாஜி பொன்நகர் | C |
| 87 | 25 | 30 | எஸ்.பி.எஸ்.வள்ளி | D |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td></td><td>கார்டன்</td><td></td></tr>
<tr><td>88</td><td>25</td><td>30</td><td>திருநாவுக்கரசு நகர்</td><td>D</td></tr>
<tr><td>8<br>9</td><td>25</td><td>30</td><td>பத்மாவதி நகர்</td><td>D</td></tr>
<tr><td>90</td><td>25</td><td>31</td><td>சீனுவாசா நகர்</td><td>D</td></tr>
<tr><td>91</td><td>25</td><td>31</td><td>ராஜ் நகர்</td><td>D</td></tr>
<tr><td>92</td><td>25</td><td>30</td><td>வேலாயுதம் கார்டன்</td><td>D</td></tr>
</table>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>3</td>
<td>சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ள அரசாணை(M.S) எண்: 52 நாள்: 30.03.2022ல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் 01.04.2022 முதல் சொத்துவரி மற்றும் காலிமனை வரி பொது சீராய்வு 10குறித்து தினசரி நாளிதழில் அறிவிப்பு விளம்பரம் செய்யவும், வரிவிதிப்புதாரர்களுக்கு வழங்க வேண்டிய சுயமதிப்பீட்டு படிவம் மற்றும் இதர படிவங்கள் அச்சடித்து பெறவும், மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்வதற்கான கட்டணம் மற்றும் உயர்த்தப்பட்ட சொத்துவரிகளுக்கான சிறப்பு அறிவிப்புகள் (Special Notice) அனுப்பவும் ஆகும் தோராய செலவினம் ரூ.7.50 லட்சம் (ரூபாய் ஏழு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. கூட்டுறவு அச்சகம் மூலம் மேற்படி படிவங்கள் அச்சடித்து பெற மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்3621/2018அ2)</td>
<td>தீர்மானம் எண்:03.<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>4</td>
<td>திண்டிவனம் நகராட்சிக்கு சொந்தமான சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலை பகுதியில் சர்வே எண்.33/4 மற்றும் 34/5ல் 6 ஏக்கர் நிலத்தில் புதிய நவீன பேருந்து நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்டதன்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இடமானது ஏரிபகுதியை சுற்றி உள்ள காரணத்தால் அப்பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.<br>மேற்படி வழக்கின் W.P.NO 23163/2009, நாள்.28.03.2011-ம் தேதிய தீர்ப்பில் திண்டிவனம் நகராட்சிக்கு சொந்தமான சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலை பகுதியில் சர்வே எண்.33/4 மற்றும் 34/5ல் உள்ள 6 ஏக்கர் புதிய பேருந்து நிலையம் அமைக்க கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்படுத்தி தீர்ப்பு வழங்கி மேற்கண்ட இரண்டு வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டது.<br>இதனை தொடர்ந்து அரசாணை நிலை எண்.20 ந.நி(ம) கு.வ.துறை(IV) நாள்.25.01.2022ல் ரூ.25.50 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கி</td>
<td>தீர்மானம் எண்:04.<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து தொழில்நுட்ப அனுமதி வழங்குமாறு TUFIDCO நிறுவனத்தில் கோரப்பட்டதில் புதிய பேருந்து நிலையம் அமைக்க வழக்கின் தீர்ப்பில் தெரிவித்துள்ளபடி மாநில அரசு வழங்கறிஞரின் சட்ட கருத்துரு பெற்று வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க சென்னை மாநில அரசு வழக்கறிஞரின் சட்டக்கருத்து பெற்று வழங்குமாறு தெரிவிக்கப்பட்டதன் பேரில் மேற்படி, அரசு வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி, மேற்படி, பகுதியில் உள்ள திண்டிவனம் ஏரியினை ஆழப்படுத்தி கரையை பலப்படுத்த வேண்டும் என மாநில அரசு வழக்கறிஞர் அவர்கள் வாய்மொழி உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது<br>இதன்படி திண்டிவனம் நகராட்சி சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலை பகுதியில் அமைந்துள்ள திண்டிவனம் ஏரியை ஆழப்படுத்தி கரையை பலப்படுத்திட தோராய செலவினம் ரூ.48.00 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.<br>இதன்படி திண்டிவனம் ஏரிப்பகுதியை ஆழப்படுத்தி கரையை பலப்படுத்திட ரூ.48.00 லட்சத்திற்கு ஏற்கனவே பேருந்து நிலையம் அமைப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட Infra Gap Filling fund (இடைவெளி நிரப்பும் நிதி)யிலிருந்து மேற்கொள்ள மன்றத் தீர்மான எண்.492 நாள். 31.03.2022ல் அனுமதிக்கப்பட்டது. மேற்படி திட்ட நிதியானது பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு மட்டுமே பயன்படுத்த இயலும் என்பதாலும், இப் பணியானது புதிய பேருந்து நிலையம் அமைய உள்ள இடத்திற்கு அருகே உள்ள ஏரியினை ஆழப்படுத்தி கரையை பலப்படுத்தும் பணி என்பதால் மேற்கண்டவாறு மன்றத் தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்ட திட்ட நிதியினை ரத்து செய்து நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்படி செலவினத்தை உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியிலிருந்து<br>மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டதை (மன்றத் தீர்மான எண்.492 நாள். 31.03.2022) ரத்து செய்து நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4206 /2022/இ1) | |
| 5 | திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட புதிய வார்டு எண் 25 (பழைய வார்டு எண் 21) ஜெயபுரம் பகுதியில் புதிய நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க நிர்வாக செயலாளர், தேசிய சுகாதா பணி அவர்களின் ந.க.எண்.1869/NOHM/2015, நாள்.13.10.2021ம் தேதிய செயல்முறை உத்தரவில் நிதி ஒதுக்கீடு செய்தும் மற்றும் துணை இயக்குநர் சுகாதார பணிகள் விழுப்புரம், அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.6987/NUHM/2015, நாள்.24.03.2022ல் ரூபாய் | தீர்மானம் எண்:05.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 75.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் **2021–2022** நிதியின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கடிதம் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>**1.** மன்றம் பதிவு செய்யலாம்<br>**2.** மேற்கண்ட திட்டநிதியின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 6 | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனங்களுக்கு, புகை மருந்து இயந்திரம் ஜெனரட்டர் மற்றும் அனைத்து பொறியியல் பிரிவு பணிகளுக்கும் K.S.V.R & N.B.C நிறுவனத்தின் மூலம் 31.03.2022 வரை டீசல் மற்றும் பெட்ரோல் பெறப்பட்டு வந்தது. நிர்வாக நலன் கருதி 01.04.2022 முதல் DKP ஏஜென்சி, திண்டிவனம் என்ற நிறுவனத்தில் எரிபொருள் பெற்று கொள்ளவும் அதற்கு ஆகும் தோராய செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>பொது சுகாதார பணி பொது மக்கள் நலன் மற்றும் அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.145/எச்1/2022) | தீர்மானம் எண்:06.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 7 | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனங்களுக்கு K.S.V.R & N.B.C டீலர் திண்டிவனம் என்ற நிறுவனத்தில் எரிபொருட்கள் பெறப்பட்டு வந்தது. தற்போது நிர்வாக நலன் கருதி மேற்படி நிறுவனத்தின் மூலம் பெறப்பட்டு வந்த எரிபொருள் பெறப்படுவது 31.03.2022–ன் நிறுத்தம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:–<br>நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.145/எச்1/2022) | தீர்மானம் எண்:07.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

***********************